**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.P.குமார் சிங்,<br>ஆணையாளர்,<br>நகராட்சி அலுவலகம்,<br>கடையநல்லூர். | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்<br>திருநெல்வேலி. |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்: .09.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி – சாதாரணக் கூட்டம் 30.09.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 30.09.2020 அன்று சாதாரணக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்– 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 15.02.2018ம் தேதிய ந.க.எண்.3939/P3/2018-ல் 204 தூய்மை பணியாளர் பணியிடங்கள் தனியார் (Outsource) மூலம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நிரந்தர தூய்மை பணியாளர்களுடன் சேர்த்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இந்த தனியார் (Outsource) தூய்மை பணியாளர்களுக்குரிய ஒப்பந்த காலம் 31.03.2021 உடன் முடிவடைகிறது.

மேலும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் ந.க.எண்.28369/J3/2018 நாள்.04.12.2018 உத்தரவில் கூடுதலாக கடையநல்லூர் நகராட்சிக்கு 89 தூய்மை பணியாளர்களையும் தனியார் (Outsource) மூலம் நிரப்பிக் கொள்ள அனுமதி அளித்துள்ளார்கள்.

அரசாணை எண்.101 நாள்.30.04.97ன்படி கீழ்க்கண்டபடி இந்நகராட்சிக்கு 418 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

<u>**தேவைப்படும் பணியாளர்கள் விவர கணக்கீடு**</u>

| **வ. எண்.** | **விவரம்** | **தேவைப்படும் பணியாளர்கள்** |
|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 தூய்மை பணியாளர்கள் வீதம் (30176 / 250 = 120 × 3 = 360) | 360 |
| 2 | பேருந்து நிலைய கழிவறை பராமரிக்க | 2 |
| 3 | பேருந்து நிலையம் சுத்தம் செய்ய | 3 |
| 4 | சிறிய லாரி (3 X 4 = 12) | 12 |
| 5 | டிராக்டர் (1 X 3 = 3) | 3 |
| 6 | டம்பர் பிளேசர் (1 X 1 = 1) | 1 |
| 7 | பசுமை உரக்குடில் (6 X 5 = 30) | 30 |
| 8 | தினசரி சந்தை (1 X 2 = 2) | 2 |
| 9 | மெயின் ரோடு சுத்தம் செய்ய (5KM X 1 = 5) | 5 |
| | **மொத்தம்** | **418** |

இதன்படி தேவைப்படும் 418 தூய்மை பணியாளர்களுக்கு தற்போது நிரந்தர தூய்மை பணியாளர்கள் 88 நபர்கள் மட்டுமே உள்ளனர். இந்த நிரந்தர பணியிடங்கள் போக மீதம் தேவைப்படும் (418 - 88 = 330) 330 பணியிடங்கள் தனியார் (Outsource) மூலம் நிரப்பப்பட வேண்டும் என்ற போதிலும் நகராட்சி நிதி நிலையை கருத்தில் கொண்டும் மற்றும் பொதுசுகாதாரத்தை பேணுவதில் தற்போது பசுமை நுண்உரக்குடில்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ள சூழ்நிலையை கவனத்தில் கொண்டும் ஏற்கனவே சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ள 240 + 89 = 293 தூய்மை பணியாளர் பணியிடங்களை தனியார் (**Outsource**) மூலம் ஒவ்வொரு ஆண்டும்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் ஊதியம் மற்றும் EPF + ESI + நிர்வாகம் மற்றும் இதர செலவினங்களை சேர்த்து 01.04.2021 முதல் 31.03.2024 வரை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் முதன்மை அனுமதி (Principle Clearance) பெறவும், இதன் பொருட்டு ஏற்படும் ஒரு ஆண்டிற்கான ரூ.6.50 கோடி உத்தேச செலவினத்திற்கும் மற்றும் இதன் பொருட்டு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3587/2020/எச்1)**

**தீர்மான எண். 222**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

இந்நகராட்சி மூலம் கொரோனா தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் எளிதில் நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள (+55, −55 Comorid and ANC) ஆகியவர்களுக்கு வெப்பநிலை, இரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு கண்டிறிய தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 04.09.2020ம் தேதிய அய்வுக்கூட்டத்தில் உத்திரவிட்டதின்படி இப்பணியை மேற்கொள்வதை பதிவு செய்ய 35 DBC குழுக்களுக்கு 35 பதிவேடு தேவைப்பட்டதையும் மற்றும் பல்ஸ் ஆக்ஸிமீட்டருக்கு தேவையான 120 எண்ணம் பேட்டரிகள் ஆகியவை அவசர அவசிய தேவையை முன்னிட்டு வாங்கியதற்கு அனுமதியும் மற்றும் திரு.சு.சேகர், துப்புரவு ஆய்வாளருக்கு பிரிவு 15ன் கீழ் இதன் பொருட்டு செலவுத் தொகை ரூ.4665/−ஐ வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 223**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் ஆறு பசுமை நுண் உரக்குடில்கள் அமைக்கப்பட்டு தற்போது கூடுதலாக இன்னொன்று அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலக்கடையநல்லூரில் இரண்டு எண்ணம், கிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில் உள்ள பசுமை உரக்குடில்கள் அமைக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டதால் பசுமை உரக்குடில்களில் மக்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரத்தில் பிளேடுகள் அடிக்கடி பழுது ஏற்பட்டும், உடைந்தும் விடுவதால் குப்பைகளை அரைத்து உரமாக்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி இயந்திரத்திற்கான பிளேடுகள் உடைந்தால் மாற்று ஏற்படாகவும் இந்த மூன்று பசுமை உரக்குடில்களுக்கும் 21 பிளேடுகள் புதிதாக வாங்கிட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/−(ஒரு இலட்சம்)ற்கு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு ஆணையாளர் அவர்களின் உத்தரவுபடி இந்நகராட்சி ஒப்பந்தக்காரர்களிடம் 08.09.2020 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி | எண்ணம் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | M.Madasamy (contractor). ATHIBAN CONSTRUCTIONS. 90e/1, Malampattai road, Melakadayanallur, Kadayanallur. | 1 | ரூ.3925/− |
| 2. | M.Maheswari. Contractor, Kadayanallur. | 1 | ரூ.3950/− |

| | | | |
|---|---|---|---|
| 3. | K.S. Abdul malik,<br>Contractor,<br>Kadayanallur. | 1 | ரூ.4100/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள Thiru. M.Madasamy contractor, ATHIBAN CONSTRUCTIONS, 90e/1, Malampattai road, Melakadayanallur, Kadayanallur, என்ற ஒப்பந்தக்காரர் விலைப்புள்ளியை ஒப்புகொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3186/2020/எச்1)**

**தீர்மான எண். 224**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 4**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TN76 B 1222 வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் 19.08.2020 முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 16.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | மூஸா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி. | ரூ.59900/– |
| 2. | ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ்,<br>3/514, தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாகுளம். | ரூ.66900/– |
| 3. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1A, பழைய பேருந்து நிலையம் ரோடு, தென்காசி. | ரூ.69000/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் ரூ.59900/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யவும் இதற்கான செலவினம் ரூ.59900/–க்கு மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்குரிய செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண்.2916/2020/எச்1 )**

**தீர்மான எண். 225**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கும் TN76AF 5635 டிப்பர் லாரி வாகனத்தின் டயர்கள் தேய்ந்து ரீபட்டன் போடவேண்டிய நிலையில் உள்ளதால் பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மேற்காணும் வாகன 7(ஏழு) டயர்க்கு ரீபட்டன் போடுவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.21000/– மதிப்பீல் போட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் 17.09.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலை விகிதம் (ஒரு டயருக்கு) |
|---|---|---|
| 1. | M.K.Tyre Service,<br>5-122(1)1, Madurai Road.<br>Anna nagar, Kuthukkalvalasai,<br>Tenkasi. | ரூ.2950/– |

| | | |
|---|---|---|
| 2. | S.K.Supreme Retreads,<br>112/20-E/6, Laxmiyapuram 7th Street,<br>Elavakulam Road,<br>Sankaran kovil. | ரூ.3200/– |
| 3. | Natarajan Motor works,<br>1A, Old Bus Stand Road,<br>Tenkasi. | ரூ.3300/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M.K.Tyre Service, 5-122(1)1, Madurai Road Annanagar-Kuthukkalvalasai, Tenkasi என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு TN76AF 5635 டிப்பர் லாரி வாகனத்திற்கு 7(ஏழு) டயர்க்கு ரீபட்டன் போடுவதற்கும் அதற்கான செலவினத்தொகை ரூ.21000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3337/2020/எச்1)**

**தீர்மான எண். 226**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.19396/2017/பி3, நாள்.23.01.2019 அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.1460/2020/அ2, நாள்.11.09.2020 கடிதத்தின்படியும், இந்நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளின் மூலம் தயாரிக்கப்பட்ட உரம் இதுவரை விற்பனையான (ஜீலை–2019 முதல் ஆகஸ்ட்–2020ம் தேதி வரை) தொகை ரூ.55800/– (ரூபாய் ஐம்பத்தி ஐந்தாயிரத்தி எண்ணூறு மட்டும்)த்தை குப்பைகளை பிரித்தல் (Segregation) மற்றும் உரமாக்குதல் பணியில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக பிரித்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.350/2020/எச்1)**

**தீர்மான எண். 227**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பகுதியில் இதுவரை 337 நபர்கள் கொரோனா தொற்று நோயினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா பரவாமல் தடுக்கும் பொருட்டு பாதிக்கப்பட்ட இடங்கள் பொது இடங்கள் மக்கள் கூடும் இடங்கள், பொது கழிப்பறை போன்ற இடங்களில் தினந்தோறும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகின்றன. கிருமி நாசினியாக பயன்படும் குளோரின் திரவம், லைசால் போன்றவை தற்போது குறைந்த அளவை இருப்பில் உள்ளது. எனவே மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் குளோரின் திரவம் 3000 லிட்டர் லைசால் 1000லிட்டர் வாங்கிட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் 25.08.2020ம் தேதிய அனுமதி மற்றும் ஆணையர் உத்திரவுபடி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின்பெயர்(ம) முகவரி | Supply and delivery of Liquid Chlorine (1 liter) Rs. | Supply and delivery of Disinfection Liquid (Lysol (1 liter) Rs. |
|---|---|---|---|
| 1. | MS Enterprises,<br>25, Silver palace 2nd floor,<br>Vinayagar koil Street,<br>Avadi, Chennai. | 17.40 | 145.00 |
| 2. | Shri.Sathya Dyes and Chemicals,<br>1/73, Asaripatti Road,<br>Antipatti, Srinivasa nagar, | 19.70 | 298.00 |

| | | | |
|---|---|---|---|
| | Theni. | | |
| 3. | Quality Engineering System,<br>65, Razam Street,<br>Padi, Chennai. | 29.70 | 292.00 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவானவிலைவிகிதம் கொடுத்துள்ள MS Enterprises, 25, Silver palace 2nd floor, Vinayagar koil Street,Avadi, Chennai, நிறுவனத்தின் மூலம் மேற்கண்ட பொருட்கள் வாங்கிட அனுமதியும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.20 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 228**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள கீழ்கண்ட நான்கு வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் காலம் கீழ்க்காணு நாட்களில் நிறைவுபெறுகிறது. எனவே மேற்படி வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் புதுப்பிக்க வேண்டியுள்ளதால் அதற்கான தொகை ரூ.84,120/—ஐ இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | இன்சூரன்ஸ் நிறைவடையும் காலம் | தொகை |
|---|---|---|---|
| 1. | TN 76 AM 7465 | 13.10.2020 | 21030/— |
| 2. | TN 76 AM 7486 | 13.10.2020 | 21030/ |
| 3. | TN 76 AM 7479 | 13.10.2020 | 21030/ |
| 4. | TN 76 AM 7462 | 13.10.2020 | 21030/ |
| | | மொத்தம் | 84120/— |

**(ந.க.எண்.3121/2020/எச்1)**

**தீர்மான எண். 229**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி டெங்கு நோய் பாதிக்கப்பட்ட பகுதி என்பதனால் மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்கள் அறிவுரையின்படி DBC பணியாளர்கள் மூலம் கொசுப்புழு அழிப்பு பணிகள் மற்றும் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்திட புகைமருந்து அடிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது மருந்துகள் இருப்பு குறைவாக உள்ளதால் மேற்படி பணிக்கு தேவைப்படும் Temephos Emulsifiable 50% EC (டெமிபாஸ் 50% EC ) மற்றும் Pyrethrum 2% (பைரித்திரம்2% Extract) தலா 200 லிட்டர் வீதம் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் லிமிடேட், சென்னை அவர்களின் 14.11.2018ம் தேதிய வழிகாட்டுதலின் பேரின் அரசு அங்கீகாரம்பெற்ற M/s.Paramount Pesticides Limited, 35/3A/3, Old Delhi Octroi Post, Delhi Road Merrut நிறுவனம் மூலம் வாங்கிட விநியோக உத்திரவு வழங்கியதற்கு அனுமதியும், இதற்கான செலவினம் ரூ.5,00,000/—க்கு (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3717/2020/எச்1)**

**தீர்மான எண். 230**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

கடையநல்லூர் நகராட்சியில் இயங்கி வரும் கணினி வசூல் மையங்களுக்கு VPN Conection (Virtual Private Network) BSNL நிறுவனம் மூலம் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி இணைப்புகளுக்கு

01.10.2019 முதல் 31.12.2019 – ரூ.48295/–

01.01.2020 முதல் 31.03.2020 – ரூ.48295/–

ஆகமொத்தம் ரூ.96590/– BSNL நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.819/2019/அ1)**

**தீர்மான எண். 231**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சி குடிநீர் விநியோக திட்ட மராமத்து பணிகள் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) ஒப்பந்தக்காரர் மூலம் இந்நகராட்சிப் பகுதியிலுள்ள தலைமை நீரேற்று நிலையம், பெரிய நாயகம் கோவில் திறந்த வெளிக்கிணறு, இடைநிலை நீருந்து நிலையம் பகிர்மான குழாய்கள் அடைப்பு திறப்பு பணிகள் 9/2020ம் மாதத்துடன் முடிவு பெறும் நிலையில் மீண்டும் மேற்காணும் பணிகளை தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) ஒப்பந்தக்காரர் மூலம் 10/2020 முதல் 1/2021 வரை உள்ள காலத்திற்கு 2020–2021ம் ஆண்டு PWD விலை விகித பட்டியலின் படி உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.95/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ) குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மற்றும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 26.08.2020அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகரத்திற்காக.

ஆ) மேற்காணும் பணிகளுக்கான செலவினத்தொகைகளை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3126/2020/இ1)**

**தீர்மான எண். 232**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் உள்ள தெரு விளக்குகள் இயக்குதல் பராமரித்தல் பணிக்கான மாநில அளவிலான மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்கள் மூலம் New Indian Express Tamil Nadu மற்றும் Malai Murasu Tamil Nadu ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண். 1764 நாள்.20.08.2020ன்படி ரூ.72,188/–யை EYEDEA BRAND SOLUTIONS என்ற நிறுவனத்திற்கு வழங்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1240/2020/இ1)**

**தீர்மான எண். 233**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கடையநல்லூர் நகராட்சி தலைமை பணியிடம் பெரியாற்றுப் படுகையிலுள்ள Gallery Well ல் உள்ள 30HP Turbing மின்மோட்டர் சாப்ட்டு அடிக்கடி உடைந்து veriation ஆவதால் பழுதாகிவிடுகிறது. மேலும் மேற்காணும் 30HP Turbing மின்மோட்டர் பொருத்தப்பட்டு 16 வருடத்திற்கு மேல் ஆன நிலையில் மீண்டும் பழுதுகள் பார்க்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் வறட்சி காலங்களில் மேற்காணும் மோட்டார் அடிக்கடி இயக்க முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும் மேற்கண்ட Turbine Pumb

மோட்டார் பழுதுகள் ஏற்பட்டதால் பழுது நீக்கம் செய்ய அதிக நாட்கள் ஆவதால் நகருக்கு குடிநீர் விநியோக செய்ய இயலாத நிலை ஏற்படுவதை கருத்திற்கொண்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் தலைமை பணியிடம் பெரியாற்று படுகையிலுள்ள Gallery Well–க்கு ரூ.8.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 30.00HP சப்மோட்டார் (LPM -3000) அதற்குகான Starter, Cable, Pipe, value பொருத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1337/2020/இ1)**

**தீர்மான எண். 234**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 14**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு. K.ராமையா மூப்பனார் என்பவர் 2004–2005 முதல் 2006–2007ம் ஆண்டில் வருவாய் தலைப்பு நிதியின் கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று 1 வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | கடகாலீஸ்வரர் கோவில் சன்னதி தெருவில் தார்சாலை அமைத்தல் பணி. | ரூ.15,000/– |
| 2 | இந்திரா நகர் மேற்கு பகுதியில் கடகாலீஸ்வரர் கோவில் முதல் பண்பொழி ரோடு வரை தார்சாலை அமைத்தல் பணி. | ரூ.13,982/– |
| 3 | மாதாங்கோவில் வடக்கு தெரு, தெற்கு தெரு, தென்வடல் தெரு மற்றும் வடகத்தியம்மன் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் பணி. | ரூ.20,000/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 3 வரையுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ.48982/– யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.48982/– யை திரு. K.ராமையா மூப்பனார்ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3560/2020/இ1)**

**தீர்மான எண். 235**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.23 மேலக்கடையநல்லூர் நாடார் கீழத்தெருவில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் ரூ.225000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.220 நாள்–31.08.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 25.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திருமதி .M.மகேஸ்வரி. ஒப்பந்தக்காரர். கடையநல்லூர். | 0.06% குறைவு | ரூ.2250/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005373 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு .M.மாடசாமி. ஒப்பந்தக்காரர். கடையநல்லூர். | 0.37% அதிகம் | ரூ.2250/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005374 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திருமதி. M.மகேஸ்வரி ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1971/2020/இ1)**

**தீர்மான எண். 236**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

கடையநல்லூர் நகராட்சி – அலுவலக முதல் தளத்தில் உள்ள நகரமைப்பு பிரிவு அலுவலகத்தில் அலுமனிய தடுப்புகள் மற்றும் குளிர்சாதன வசதிகள்(A/C), பொறியியல் பிரிவில் தடுப்புகள் மற்றும் கப்போடு வசதிகள் அமைக்கவும் மற்றும் தரைதளத்திலுள்ள பொதுபிரிவிற்கு குளிர்சாதன வசதிகள் (A/C)ரூ.580000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.184 நாள்–31.07.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 25.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . K.S. அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர் கடையநல்லூர். | 0.06% குறைவு | ரூ.5800/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005380 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு . P.M. அசன்முகம்மது ஒப்பந்தக்காரர் கடையநல்லூர். | 1.66% அதிகம் | ரூ.5800/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005381 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு . K.S. அப்துல் மாலிக்ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1971/2020/இ1)**

**தீர்மான எண். 237**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

கடையநல்லூர் நகராட்சி – அலுவலக வடபுறத்தில் உள்ள அம்மாஉணவகத்தில் மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் ரூ.6,80,000/– மதிப்பீட்டில் மேற்க்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.219 நாள்–31.08.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 25.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| திரு . APMA.காஜா ஒப்பந்தக்காரர் கடையநல்லூர். | 0.09% குறைவு | ரூ.6800/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005392 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு . P.ஆயிஷா ஒப்பந்தக்காரர் கடையநல்லூர். | 3.34% அதிகம் | ரூ.6800/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005391 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள APMA.காஜா ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2616/2020/இ1)**

**தீர்மான எண். 238**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.1 குமந்தாபுரம் நடுத்தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 3TPD நுண்ணுயிர் உரக்குடில் மையத்தினை சுற்றி பாதுகாப்புச்சுவர் மற்றும் முன்முகப்பு கேட் ரூ.980000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.163 நாள்–31.07.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 25.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு .M.மாடசாமி. ஒப்பந்தக்காரர். கடையநல்லூர். | 0.14% குறைவு | ரூ.9800/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005375 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |
| திருமதி .M.மகேஸ்வரி. ஒப்பந்தக்காரர். கடையநல்லூர். | 1.75% அதிகம் | ரூ.9800/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005376 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.14% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.M.மாடசாமி ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2056/2020/இ1)**

**தீர்மான எண். 239**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

கடையநல்லூர் நகராட்சி – குடிநீர் விநியோக பணிகளுக்கு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) ஒப்பந்ததாரர் மூலம் பணிலமர்த்தும் பணியினை ரூ.9,95,000/– மதிப்பீட்டில் மேற்க்கொள்ள இந்நகராட்சி தனிஅலுவலர் 26.08.2020 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 25.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . APMA.காஜா<br>ஒப்பந்தக்காரர்<br>கடையநல்லூர். | 0.23%<br>குறைவு | ரூ.9950/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005394 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு . P.ஆயிஷா<br>ஒப்பந்தக்காரர்<br>கடையநல்லூர். | 9.30%<br>அதிகம் | ரூ.9950/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005393 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.23% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள APMA காஜா ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3126/2020/இ1)**

**தீர்மான எண். 240**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.20

கடையநல்லூர் நகராட்சி – மதிப்பீட்டில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019ன்** வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 3வது தெருவில் (கமரூத்தின் வீட்டிலிருந்து கல்கோணா வீடு வரை சுமார் அறுபது மீட்டர்) பேவர்பிளாக் சாலை ரூ.200000/– மதிப்பீட்டில் அமைத்தல் பணிக்கு **தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/4193/2019 நாள் 19.08.202020ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும்** இந்நகர் மன்ற தீர்மானம் எண்.221 நாள்.31.08.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் பணியினை செய்ய 25.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு.P. சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.08%<br>குறைவு | ரூ.2000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0005379 நாள். 25.09.2020 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. U.சேக்அப்துல்காதர்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 3.20%<br>அதிகம் | ரூ.2000/–க்கான IOB BAZZAR KDNR D.D.NO. 135242 நாள்.25.09.2020ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.08%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.P. சாகுல்கமீது, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3008/2018/இ1)**

**தீர்மான எண். 241**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 28, புதுமனை வடக்கு தெருவில், நகரளவை ஆவணங்களின்படி சர்வே வார்டு F, பிளாக் எண்.9, நகரளவை எண்.174– தனியார் பட்டா மனையாக பதிவாகியுள்ள பகுதியினை ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் புதுமனை வடக்கு தெருவினையும் மற்றும் புதுமனை தெற்கு தெருவினையும் இணைக்கும் தென்வடல் தெருவாக நிலை நிறுத்தி, வழியுரிமையினை பாதுகாத்து வழங்குவதற்குரிய பரிகாரம் கேட்டு திரு.T.M.முகம்மது இஸ்மாயில் என்பவரால் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை 1ம் பிரதிவாதியாகவும் மற்றும் திரு.முகம்மது உசேன் என்பவரை 2ம் பிரதிவாதியாகவும் கட்சி சேர்த்து சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P.(MD) No.7410 of 2020ன்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வழக்கில் இந்நகராட்சியின் சார்பாக கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.ராஜராஜன் அவர்கள் ஆஜராகுவதற்கும் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1944/2020/எப்1)**

**தீர்மான எண். 242**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளும் மற்றும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசு மருத்துவமனையில் ஆய்வு செய்த போது அருகிலுள்ள பாப்பான் கால்வாய் ஓடையை ஜேசிபி மூலம் சுத்தம் செய்ய அறிவுரை வழங்கினார்கள். இதன்படி இப்பணியை மேற்கொள்ள இந்நகராட்சி ஜேசிபி பழுதான நிலையில் எதிர்வரும் பருவமழையை கருத்தில் கொண்டு தண்ணீர் சீராக செல்லும் பொருட்டு கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி அவசர அவசிய தேவையை முன்னிட்டு பொது மக்களின் பொது சுகாதார நலன்கருதி புளியங்குடி ஜேசிபி வாகனம் மூலம் 11.09.2020, 12.09.2020, 14.09.2020, 15.09.2020 ஆகிய தேதிகளில் பணி செய்த வகைக்கு ஏற்பட்ட எரிபொருள் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 243**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.8 நாட்டாண்மை தெரு (மேல்பகுதி) உள்ள மழைநீர் வடிகால் கட்டப்பட்டு 10 ஆண்டுக்கு மேல் ஆன நிலையில் மிகவும் சிதிலமடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் கழிவு நீர் மற்றும் வாறுகாலில் மழைநீர் செல்ல முடியாமல் உள்ளதால் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. ஆகவே அவசர அவசியம் கருதி இதனை சீர்செய்யும் பொருட்டு மேற்காணும் பகுதியில் ரூ,600000/– உத்தேச மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3092/2020/இ1)**

**தீர்மான எண். 244**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.24**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்22 இந்திரா நகர் புதுக்காலணி மேற்கு பகுதி குறுக்கு தெருவில் (1வது கிழமேல்தெரு) வாறுகால் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு அவசர அவசியம் கருதி மேற்காணும் பகுதியில்

புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.500000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3122/2020/இ1)**

**தீர்மான எண். 245**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

கடையநல்லூர் நகராட்சி அட்டக்குளம் பகுதியில் இயற்கை நுண்உரக்குடில் மையம் புதிதாக அமைக்கப்பட்டு பொது சுகாதாரப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்காணும் உரக்குடில் மையத்தில் Weld mesh வசதிகள் இல்லாததால் பாம்பு, பறவையினங்கள் மற்றும் இதர ஜந்துக்கள் ஆகியவைகள் உரக்குடில் மையம் வளாகத்திற்குள் நுழைந்து உரங்களை சேதப்படுத்தி விடுகின்றனர். இதனை தடுக்கும் பொருட்டு Weld mesh வசதிகள் மற்றும் Partition (zinc sheet) வசதிகள் அடைப்பு செய்யும் பணிகள் மேற்க்கொள்ள வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி மேற்காணும் அட்டக்குளம் தெரு பகுதியில் உள்ள பசுமை நுண்ணுயிர் உரக்குடிலுக்கு சுற்று சுவர் இணைப்பு சாலை அமைத்து Weld mesh வசதிகள் Partition (zinc sheet) அமைக்கும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.760000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3122/2020/இ1)**

**தீர்மான எண். 246**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.26**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.26 காமாட்சி அம்மன் கோவில் தெரு (தெற்கு தெரு) மற்றும் வடக்கத்தி அம்மன் கோவில் வடபகுதி வாறுகால் வசதிகள் போதுமானதாக இல்லை மற்றும் காமாட்சியம்மன் கோவில் தெற்கு தெரு பகுதியில் உள்ள குறுக்கில் வடிகால் பாலம் மிகவும் சிதிலமடைந்துள்ளதை சீர் செய்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அதனடிப்படையில் மேற்காணும் பகுதியில் மழைநீர் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.995000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1849/2020/இ1)**

**தீர்மான எண். 247**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

கடையநல்லூர் நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் Biomining முறையில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிகள் மற்றும் கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணிகள் நடைபெற்று வரப்படுகின்றது. இந்நிலையில் மேற்காணும் உரக்கிடங்கில் முன்புறம் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருவதால் உரக்கிடங்கின் முன்பகுதி மேற்கு பகுதியில் மட்டும் சுற்று சுவர் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் உரக்கிடங்கின் தென்பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால் இரவு நேரங்களில் மர்ம நபர்கள் உள்ளே சென்று குப்பைகளை தீ வைத்தல் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான உடைமைகளை திருடியும் மற்றும் சட்டவிரோத செயல்களில் மர்ம நபர்கள் ஈடுப்பட்டு வரப்படுகின்றனர். ஆகவே இந்நிலையினை

போக்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி போகநல்லூர் உரக்கிடங்கின் தென்புறம் புதிதாக சுற்றுச்சுவர் அமைக்கும் பணியினை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.980000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3295/2020/இ1)**

**தீர்மான எண். 248**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.28**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.26 வடக்கத்தியம்மன் கோவில் உள்ள சுமார் 50 குடும்பங்களுக்கு குடிநீர் பண்பொழி ரோடு குடிநீர் விநியோகம் (Zone) தீயணைப்பு நிலைய உயர்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து விநியோகம் செய்யும் குடிநீர் சீராக கிடைப்பதில்லை. இதனால் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் அடிக்கடி நகராட்சி அலுவலகத்தினை முற்றுகையிட்டு வருகின்றனர். இந்நிலையினை போக்கும் பொருட்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் மலம்பாட்டை ரோட்டிலிருந்து மேற்காணும் தெருவிற்கு சுமார் 150.00மீ நீளத்திற்கு 110mm4’’ PVC Feeder line (Additional Line) குடிநீர் குழாய் அமைத்து கொடுக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.115000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3297/2020/இ1)**

**தீர்மான எண். 249**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.29**

கடையநல்லூர் நகராட்சி இடைநிலை நீரேற்று நிலையத்திலிருந்து கிருஷ்ணாபுரம் 4.50LL OHT மற்றும் குமந்தாபுரம் 0.90LL OHT ஆகிய இடங்களுக்கு 12.5 HP Centrifcal Pump & motor மூலம் Pumping செய்து இயக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் புதிய பைப்லைன் போடப்பட்டு நகராட்சி மூலம் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருவதால் மேற்காணும் மோட்டாரினை தொடர்ந்து இயக்கி Pumping செய்யப்படுகிறது. மேலும் மேற்காணும் இடைநிலை நீருந்து நிலையத்தில் உள்ள 12.5 HP மோட்டார் பொருத்தப்பட்டு 14 வருடங்களுக்கு மேல் ஆனநிலையில் தொடர்ந்து இயக்கி வருவதால் அதிலுள்ள Pump, Shaft, Jupiller, Bearing எல்லாம் அடிக்கடி தேய்மானம் ஏற்பட்டு பலமுறை பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு இயங்கிவருகிறது. தற்போது மேற்காணும் மோட்டார் பம்ப் வழியாக அதிகமாக தண்ணிர் வெளியேவருவதாலும் பயங்கர சப்தத்துடன் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. ஆகவே குடிநீர் பணியின் அவசர மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் புதிதாக மோட்டார் பம்ப், Starter, Cable ஆகியவைகள் புதிதாக அமைத்து சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.975000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3007/2020/இ1)**

**தீர்மான எண். 250**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.30**

கடையநல்லூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் கிருஷ்ணாபுரம் பார்க் 2.40LL OHT முத்துகிருஷ்ணாபுரம் 2.70LL OHT மற்றும் குமந்தாபுரம் OHT ஆகிய குடிநீர் மேல்நிலை தொட்டிகளக்கு Pumping செய்யப்படும் Pump & motor, Starter அதனுடைய pannel Board ஆகியவை பொருத்தப்பட்டு 14(பதிநான்கு) வருடங்களுக்கு மேல் ஆன நிலையில் Shaft மற்றும் motor pannel அடிக்கடி பழுதாகிவிடுவதால் மேற்காணும் குடிநீர் மேல்நிலை தொட்டிகளுக்கு Pumping செய்யும் பொழுது நகருக்கு குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் அதிக தேய்மானம் காரணமாக Shaft வழியாக தண்ணீர் வெளியே செல்கிறது. pannel உள்ளே Main கேபிள் Melt ஆன நிலையில் உள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு மேற்காணும் மூன்று மேல்நிலை தொட்டிகளிலிருந்து நகருக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய Pumping செய்யப்படும் Pump & motor, Starter அதனுடைய pannel Board ஆகியவைகள் புதிதாக அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.985000/—க்கு இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2927 /2020/இ1)**

**தீர்மான எண். 251**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

நாடெங்கிலும் கோவிட்—19 கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி விடுவதை தடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அரசு, மாவட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து நகராட்சி நிர்வாகமும் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் நோய்த்தடுப்பு நடவடிக்கையாக 24.03.2020 முதல் 31.05.2020 வரை அரசால் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. மேற்கண்டவாறு ஊரடங்கு அமுல்படுத்தப்படுத்தப்பட்ட காலங்களில் இந்நகராட்சியின் ஆண்டு குத்தகை இனங்கள் 1) தினசரி சந்தை, 2) வாரச்சந்தை, 3) இருசக்கர வாகனகாப்பகம், 4) பேரூந்து கட்டண வசூல், 5) பண்பொழிரோடு கட்டண கழிப்பிடம், 6) பேரூந்து நிலைய கட்டணக் கழிப்பிடம், 7) சாலை ஓரக்குத்தகை, 8) ஆடறுப்புமனை, 9) மரங்கள் குத்தகை, 10) அண்ணாமலை பொய்கை மீன்பாசி, 11) தாமரைக்குளம் மீன்பாசி, 12) அட்டக்குளம் மீன்பாசி, 13) தெப்பக்குளம் மீன்பாசி, 14) வாரச்சந்தையிலுள்ள கடைகள் மற்றும் பேரூந்துநிலையத்திலுள்ள கடைகள் ஏதும் செயல்படவில்லை.

மேலும், அரசாணை எண். 298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள். 02.09.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8763/2020/ஆர்2, நாள்.29.09.2020ல் மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு இயங்காத காலமான 01.04.2020 முதல் 31.05.2020 வரை இரண்டு மாத வாடகைத் தொகையினை தள்ளுபடி செய்ய (Waiver) உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், தக்க ஒப்புதலுக்கும், மேற்படி அரசாணையின்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3630/2020/அ3)**

**தீர்மான எண். 252**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

கடையநல்லூர் நகராட்சி அட்டகுளம் நுண்ணுயிர் உரக்குடில் மையம் முன்பகுதியில் குப்பைகளை தரம் பிரித்து எடுப்பதற்கும் மற்றும் LCV வாகனங்கள் சென்று வருவதற்கும் வசதியாக இல்லாமல் மேடுபள்ளமாக உள்ளதால் பொது சுகாதார பணிகளை துரிதமாக மேற்க்கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது. ஆகவே மேற்காணும் உரக்குடில் முன்பகுதியில் குப்பைகளை தரம் பிரிக்கும் பணிகளை

மேற்க்கொள்வதற்கு பேவர்கல் தரைத்தளம் (Working platform) அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,80,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3296/2020/இ1)**

**தீர்மான எண். 253**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் : 33

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு. C.வேலுத்துரை என்பவர் **2015–2016**ம் ஆண்டில் **வருவாய் தலைப்பு நிதியி**ன் கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று 1 வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண்.21ல் காளியம்மன் கோவில் தென்வடல் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | ரூ.30,000/– |
| 2 | மேலக்கடையநல்லூர் கட்டண கழிப்பிடம் பராமரிக்கும் பணிக்கு | ரூ.17500/– |
| 3 | வார்டு எண்.27ல் பெருமாள் கோவில் தெற்கு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் கல் அமைக்கும் பணிக்கு | ரூ.32500/– |
| 4. | மேலக்கடையநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் அமைக்கும் பணிக்கு (முதல் (ம) பகுதிபட்டியல்) | ரூ.44500/– |
| 5. | வார்டு எண்.21ல் காளியம்மன்கோவில் தென்வடல் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு. | ரூ.2122/– |
| 6. | வார்டு எண்.27ல் தேரடி தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு. | ரூ.45000/– |
| 7. | வார்டு எண்.27ல் பெருமாள் கோவில் முன்னால் சிறுமின் விசை பம்பு அமைக்கும் பணிக்கு. | ரூ.7500/– |
| 8. | வார்டு எண்.25ல் கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு பண்பொழி ரோடு (அப்பாவு சாமி மடாலயம்) மற்றும் மாதாங்கோவில் தெருவில் சிறுமின் விசை பம்பு அமைக்கும் பணிக்கு | ரூ.20980/– |
| 9. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2014/15ன்கீழ் வார்டு எண்.27ல் நியாயவிலைக்கடை அமைக்கும் பணிக்கு | ரூ.30000/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 9 வரையுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ.230102/– யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.230102/– யை திரு. C.வேலுத்துரை ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3526/2020/இ1)**

**தீர்மான எண். 254**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் : 34

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு. C.வேலுத்துரை என்பவர் 2019–2020ம் ஆண்டில் **வருவாய் மற்றும் குடிநீர் தலைப்பு நிதியின்** கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று 1 வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 சிவாஜி நகரில் மழைநீர் வடிகால் மற்றும் தேரடி தென்வடல் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு | ரூ.14716/– |
| 2 | கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் சுடுகாடு வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள MCCக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு | ரூ.26948/– |
| 3 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி (7.00 இலட்சம்) வளாகம் மேற்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு | ரூ.49000/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் 3TPD நுண்ணுயிர் உரக்குடில் மையத்தில் சுடுகாடு வாளகத்தில் புதிதாக நுண்ணுயிர் உரக்குடில் மையம் அமைக்கும் பணிக்கு | ரூ.112242/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 4 வரையுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ.202906/– யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.202906/– யை திரு. C.வேலுத்துரை ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3527/2020/இ1)**

**தீர்மான எண். 255**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் : 35

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு. V.வெள்ளத்துரை என்பவர் 2019–2020ம் ஆண்டில் **வருவாய் தலைப்பு நிதியின்** கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று 1 வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 சிவாஜி நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு | ரூ.30000/– |

| | | |
|---|---|---|
| 2 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் சுடுகாடு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள MCC வளாகத்தில் இணைப்புச் சாலை அமைக்கும் பணிக்கு. | ரூ.25000/– |
| 3 | கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் சுடுகாடு வளாகம் அருகில் பொதுக்கழிப்பிடம் பழைய உரக்கிடங்கு கிருஷ்ணாபுரம் MCC அருகிலுள்ள பொது கழிப்பிடம் மற்றும் குமந்தாபுரம் பொதுக் கழிப்பிடத்தில் RRC சென்டரில் அமைக்கும் பணிக்கு | ரூ.25000/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 3 வரையுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ.80000/– யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.80000/– யை திரு. V.வெள்ளத்துரை ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3528/2020/இ1)**

**தீர்மான எண். 256**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.36**

கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கடகாலீஸ்வரர் கோவில் வடக்கு தெருவில் அமைந்துள்ள நாகம்மாள் திருமண மண்டபம் சார்பாக தங்கமணி என்பவரால் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.380/2010 தென்காசி முதன்மை மாவட்ட நீதிமன்றம் 14.11.2014ல் அன்னாருக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பட்டது. அதனை எதிர்த்து மேல்முறையீடு தென்காசி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.80/2016 தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டு வழக்கில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பட்டது. அதற்கான செலவுத்தொகை

| | | | |
|---|---|---|---|
| 1. | தீர்பாணைக்குரிய செலவு தொகை | – | ரூ. 588.50 |
| 2. | தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நகல்கள் செலவு | – | ரூ. 500.00 |
| 3. | விவாத குறிப்புரை Type charge | – | ரூ. 950.00 |
| | | | ரூ.2038.50 |

ரூ.2039/–ஐ வழக்கறிஞர் திரு.S.முருகையா பாண்டியன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2639/2020/அ1)**

**தீர்மான எண். 257**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.37**

கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.29, ரோடு எண்.11ல் உள்ள இந்தியன் வங்கி கட்டிடம் K.S.A. கொதுவு மீரா உசேன், K.S.A. சிக்கந்தர் பாதுஷா, K.S.A. சேக் இப்ராஹிம் ஆகியோருக்கு சொந்தமான கட்டிடம் கூடுதலாக வரிவிதிக்கப்பட்டது என்று வழக்கு எண்.121/2010 தென்காசி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படியாளர்களால் தொடரப்பட்ட வழக்கு அன்னாருக்கு சாதகமாக தீர்ப்பும் வரப்பட்டது. அதனை எதிர்த்து மேல்முறையீடு நகராட்சி சார்பாக தென்காசி கூடுதல் சார்பு நீதிமன்றம் வழக்கு எண். A.S.No.59/2016 தொடரப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பட்டது. அதற்கான வழக்கறிஞர் கட்டணம் கீழ்க்கண்டவாறு

1. தீர்பாணைக்குரிய செலவு தொகை – ரூ. 588.50
2. தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நகல்கள் செலவு – ரூ. 500.00
3. விவாத குறிப்புரை Type charge – ரூ. 950.00

ரூ.2038.50

ரூ.2039/–ஐ வழக்கறிஞர் திரு.S.முருகையா பாண்டியன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2638/2020/அ1)**

**தீர்மான எண். 258**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.38**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 30.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2017–18 | | | | |
| 1. | இந்நகராட்சி வார்டு எண்.32 ரகுமானியபுரம் 3வது தெரு, வார்டு எண்.07 தெற்கு விளை தெரு, வார்டு எண்.17 முப்புடாதியம்மன் கோவில் தெரு, அம்பேத்கார் தெரு, மற்றும் செட்டிபிள்ளைமார் தெரு, வார்டு எண்.31 நத்தகர் பள்ளிவாசல் தெரு, ஆகிய இடங்களில் உள்ள பகிர்மான குழாய்களில் அடைப்புகளை நீக்கும் பணிக்கும் மற்றும் வார்டு எண்.24 மாதாங்கோவில் தெரு, பஜனைமடம் தெரு, கட்டிவிநாயகர் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் சரிசெய்ய குழாய் இணைப்புகள் (Interlink) பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.172 நாள்.06.07.2018 | 5.95/– | திரு.K.S.அப்துல் மாலிக்<br><br>திரு.P.M.அசன் முகம்மது | 0.03% குறைவு<br><br>0.40% அதிகம் |
| 2. | இந்நகராட்சிப்பகுதி வார்டு எண். 1 முதல் 33 வார்டுகளிலுள்ள குடிநீர் குழாய் இணைப்பு பெரியாற்றுப்படுகை, கல்லாறு, பெரியநாயகம் கோவில் குடிநீர் | இந்நகர்மன்ற தீர்மான எண்.173 நாள்.06.07.2018 | 5.75/– | திரு.K.S.அப்துல் மாலிக்<br><br>திரு.P.M.அசன் | மதிப்பீட்டு சதவீதம்<br><br>0.32% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குழாய் இணைப்பு ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள், கசிவுகள் ஆகியவற்றை சரி செய்யும் பணிக்கு. | | | முகம்மது | |
| 3. | இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள 182 சிறுமின் விசைபம்புகளை 2018–2019ம் ஆண்டிற்கு பராமரிப்பு செய்யும் பணி. | இந்நகர்மன்ற தீர்மான எண்.173 நாள்.06.07.2018 | 5.80/– | திரு.K.S.அப்துல் மாலிக்<br>திரு.P.M. அசன் முகம்மது | 0.01% குறைவு<br>0.49% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு சதவீதத்திலும் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்திலும் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 30.08.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலைஉத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1055/2018/இ1)**

**தீர்மான எண். 259**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) P.குமார் சிங்**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**